DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 491/2025
Miscellaneous :
Sessions : PW 4
Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | மகாராணி |
| Father / Husband Name | டேனியல் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **26.02.2026**

**முதல் விசாரணை:**

1.) நான் தற்போது அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் 2022 ம் வருடம் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் நந்தகுமார் என்பவரின் கையொப்பம் மற்றும் விசாரணை நடைமுறை பற்றி நன்கு தெரியும். தற்போது அவர் பணி ஓய்வு பெற்றுவிட்டதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 18.05.2022 ம் தேதி மதியம் 2.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் நந்தகுமார் நிலைய பொறுப்பில் இருந்தபோது கீர்த்திகா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 172/2022 இதச பிரிவுகள் 294(பி) 323 மற்றும் r/w 4 TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **( அந்த புகார் மனு அசாஆ 2 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

2.) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் நந்தினி மற்றும் செல்வராணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகசர் அசாஆ 4 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கில் காயம்பட்ட நபருக்கு விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று வழங்கிய மருத்தவர்கள் ஜெபசீலி என்பவரை விசாரித்து அறிக்கையை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(அந்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அசாஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்து வழக்கின் சட்டப்பிரிவான இதச பிரிவுகள் 294(பி) 323 மற்றும் 4 of TNPHW Act ல் இருந்து இதச பிரிவுகள் 294(பி) 323 506(1) மற்றும் 4 of TNPHW Act ஆக சட்டப்பிரிவு மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். **(அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர்

எதிரி தலைமறைவானதால் வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி) 323 506(1) மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

3. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். சக அதிகாரி சம்பவயிடம்சென்று சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது தாக்கல் செய்த பொய்யான இறுதி அறிக்கையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**